# செப்டம்பர் - 16 - சனி
## புனித கொர்னேலியுஸ்

### முதல் வாசகம் : 1 திமோத்தி1 : 15 - 17

சகோதர சகோதரிகளே! ”பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார்”. இக்கூற்று உண்மையானது. எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கது. அந்தப் பாவிகளுள் முதன்மையான பாவி நான். ஆயினும் கடவுள் எனக்கு இரங்கினார். நிலைவாழ்வை அடைய இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்ள இருப்போருக்கு நான் முன்மாதிரியாய் விளங்கவேண்டும் என்பதற்காக முதன்முதலில் என்னிடம் தம் முழுப் பொறுமையைக் காட்டினார். அழிவில்லாத, கண்ணுக்குப் புலப்படாத, எக்காலத்துக்கும் அரசராயிருக்கின்ற ஒரே கடவுளுக்கு என்றென்றும் மாண்பும் மாட்சியும் உரித்தாகுக! ஆமென்.

**பதில்பாடல் :** ஆண்டவர் பெயர் இப்பொழுதும் எப்பொழுதும் போற்றப் பெறுவதாக

### நற்செய்தி : லூக்கா 6 : 43 – 49

அக்காலத்தில் இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக்கூறியவை:”கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். ஏனென்றால் முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிப்பாருமில்லை முட்புதர்களில் திராட்சைக் குலைகளை அறுத்துச் சேர்ப்பாருமில்லை. நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும். ”நான் சொல்பவற்றைச் செய்யாது என்னை, ”ஆண்டவரே, ஆண்டவரே” என ஏன் கூப்பிடுகிறீர்கள்? என்னிடம் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவற்றின்படி செயல்படும் எவரும் யாருக்கு ஒப்பாவார் என உங்களுக்கு எடுத்துக்காட்டுகிறேன். அவர் ஆழமாய்த் தோண்டி, பாறையின் மீது அடித்தளம் அமைத்து, வீடு கட்டிய ஒருவருக்கு ஒப்பாவார். வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து அந்த வீட்டின்மேல் மோதியும் அதை அசைக்க முடியவில்லை ஏனென்றால் அது நன்றாகக் கட்டப்பட்டிருந்தது. நான் சொல்வதைக் கேட்டும் அதன்படி செயல்படாதவரோ, அடித்தளம் இல்லாமல் மண்மீது வீடு கட்டியவருக்கு ஒப்பாவார். ஆறு பெருக்கெடுத்து அதன்மேல் மோதிய உடனே அது விழுந்தது. அவ்வீட்டுக்குப் பேரழிவு ஏற்பட்டது“ என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசு எம்மோடு பேச விரும்புகின்றார். எனினும் இது எவ்வாறு நிகழக்கூடும்.? இன்றைய நற்செய்தியை வாசிக்கும் ஒருவரின் உள்ளத்தில் இப்படியான நினைவுகள் எழலாம். இவ்வாறான வினாவிற்கும் தனது நற்செய்தியின் ஊடாகவே இறைமகன் இயேசு எமக்குப் பதில் தருகின்றார். “என்னிடம் வந்து என் வார்த்தைகளைக் கேட்டு அதற்கமைவாக செயல்படு” (லூக்கா 6:47) எனக் கூறுகின்றார். அப்படி நாம் செயல்படுவோமாயின் அவர் எங்களைக் கைவிடுவதில்லை எனவும் உறுதி கூறுகின்றார். எமது நாளாந்த செபவேளைகளிலும், திருப்பலியில் திவ்விய நற்கருனை பெற்றுக்கொண்ட பின்னரும் நாம் என்ன செய்கின்றோம்.? அனேகமாக நாம் எமது தேவைகளை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்றவர்களாகவே இருக்கின்றோம். மாறாக இறைமகன் இயேசு தமது வார்த்தைகளால் எம்மோடு பேச நாம் அனுமதிக்கிறோமா? எமது செபவேளைகளில் இறைமகன் இயேசுவை எம்மோடு பேச நாம் அனுமதிக்க வேண்டும். அதுமட்டுமல்ல அவர் எம்மோடு பேசுவதற்கு மிகவும் ஆவலாகவும் இருக்கின்றார். அதற்கமைவாக நாம் தயாராகவும் (பரிசுத்தமாக) இருப்பது முக்கியம். எமது பரலோக தகப்பனது எல்லையில்லாத நிபந்தனையற்ற அன்பைக் குறித்து, எமது எதிர்காலத்தைக் குறித்து, தமது அரசை இவ்வுலகில் கட்டியெழுப்ப எவ்வாறு தமது கருவிகளாக எம்மைப் பயன்படுத்த இருக்கின்றார் என்ற தமது விருப்பத்தை எம்மிடம் எடுத்துச் சொல்ல ஆவலாக இருக்கின்றார். இறைமகன் இயேசுவின் குரலுக்குச் செவிகொடுத்து அவரது வார்த்தைகளின்படி நாம் நடந்தால் நாம் எந்தநிலையிலும் தளம்ப மாட்டோம். கற்பாறை மீது கட்டிய வீடுபோன்று உறுதியாக நிற்போம் எனவும் அவர் எமக்கு வாக்குறுதி தருகின்றார். எனவே இறைமகன் இயேசுவிடம் எமது விண்ணப்பங்களை அடுக்கடுக்காக சமர்ப்பிப்பதனை விடுத்து மாறாக எமது நல்லாயனின் குரலுக்கு செவிமடுக்கின்ற ஆடுகளாக எம்மை மாற்றுவோமா?